**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 193/2023**
**Prosecution Witness : 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. பெரியசாமி** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பழனிச்சாமி** | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **38** |
| | | | **Dated** | : | **16.07.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**A1 and A2 present.**

அ.சா. 8 (பட்டியல் சாட்சி 9), **திரு. பெரியசாமி** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து பழனி ரோட்டில் உள்ள ஸ்ரீ கணேசா மரக்கடையில் சூப்பர் வைசராக வேலை செய்து வருகிறேன். அசா. 1 மற்றும் அசா. 2 ஐ தெரியும். அவர்கள் எனது மரக்கடை உரிமையாளரின் உறவினர்கள். எதிரிகளை எனக்கு தெரியாது. எனது உரிமையாளர் குஜராத்தை சேர்ந்தவர். அவருக்கு தமிழ் எழுத தெரியாது. அதனால் என்னை போன்மூலம் வரச் சொன்னார்கள். அப்போது எனது உரிமையாளரும், மற்றொரு நபரும் இருந்தார்கள். அவர்கள் சொன்னதை எழுதிக் கொடுத்துவிட்டு, வீட்டிற்கு சென்றுவிட்டேன். புகாரில் நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். அந்த புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் Ex. P4. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

**எனது உரிமையாளரின் பெயர் அசோக். அவர் சொல்லித்தான் நான் தாலுகா காவல்நிலையத்திற்கு சென்றேன். அங்கு இரண்டு போலீசார் இருந்தார்கள். சதீஸ் படேல் அங்கு இல்லை. எனது உரிமையாளரும், போலீசாரும் சொன்னதன் பேரில் புகாரை எழுதினேன் என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது.**

R V RAJA KUMAR
Digitally signed by R V RAJA KUMAR
Date: 2025.07.16 17:36:10 +0530